இன்று (07.06.2023) மாலை 4 மணிக்கு

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா!

பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தரும் கழகத் தோழர்கள் கவனத்திற்கு!

கூட்டத்தில் கலந்து கொள்ளும் தோழமைக் கட்சி தலைவர்கள் தலைமைக் கழக நிர்வாகிகள், அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பெரம்பூர் பேரக்ஸ் ரோடு பின்னி மில் மெட்ராஸ் பங்களாவில் நுழைவாயில் 1ல் வாகனத்தை நிறுத்தி விட்டு மேடைக்கு பின்பு உள்ள நுழைவாயிலில் வருகை தருமாறு கேட்டு கொள்கிறேன்.

• மாவட்ட கழக செயலாளர்கள் நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் 2வது நுழைவாயில் வழியாக வரவும். வாகனத்தை 10வது நுழைவாயிலில் உள்ள பார்க்கிங்கில் விடவும்.

திரு.வி.க.நகர், எழும்பூர் தொகுதியைச் சார்ந்த கழக தோழர்கள் பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் உள்ள பார்க்கிங் 12ல் வாகனத்தை நிறுத்தி விட்டு 3வது நுழைவாயில் வழியாக திடலில் வந்து அமரவும்.

• துறைமுகம், ராயபுரம், தொகுதிகளை சார்ந்தவர்கள் பாரதி கலை கல்லூரி வழியாக பேசின் பிரிட்ஜ் புளியந்தோப்பு நெடுஞ்சாலை பெரம்பூர் பேரக்ஸ் சாலை ஆட்டு இறைச்சி கூடம் எதிரில் உள்ள பார்கிங்கில் 12வது நுழைவாயிலில் வாகனத்தை நிறுத்தி விட்டு 4வது நுழைவாயில் வழியாக திடலில் வந்து அமரவும்.

திருவொற்றியூர், R.K.நகர் பெரம்பூர் ஆகிய தொகுதியை சார்ந்த கழக தோழர்கள் சத்திய மூர்த்தி நகர் சாலை வழியாக மூர்த்திங்கர் சாலை, கணேசபுரம் சுரங்க பாதை வழியாக ஆட்டு இறைச்சி கூடம் எதிரில் உள்ள பார்க்கிங் 12ல் வாகனத்தை நிறுத்தி விட்டு 4வது நுழைவாயில் வழியாக திடலில் வந்து அமரவும்.

திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர், வில்லிவாக்கம், ஆகிய தொகுதியை சார்ந்தவர்கள் அம்பத்தூர் OT , பாடி மேம்பாலம் குன்னூர் நெடுஞ்சாலை, குக்ஸ் ரோடு, ஸ்டீபன்சன் ரோடு வழியாக பார்க்கிங் 8-ல் வாகனத்தை நிறுத்தி விட்டு 5வது நுழைவாயில் வழியாக திடலில் வந்து அமரவும்.

காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை மேற்கு மாவட்டம், சென்னை தென்மேற்கு மாவட்டம், சென்னை தெற்கு மாவட்டம், ஆகிய மாவட்டங்களில் இருந்து வருகை தருபவர்கள் கோயம்பேடு பூந்தமல்லி நெடுஞ்சாலை, ஜி.என்.டி.சாலை, அண்ணா சாலை, சிம்சன் சாலை,ஈ.வெ.ரா.சாலை, ரித்தர்டன் சாலை, பெரம்பூர் பேரக்ஸ் சாலை வழியாக பின்னி மில் வாகனம் நிறுத்தும் இடத்திற்கு 8வது நுழைவாயிலில் வாகனத்தை நிறுத்தி விட்டு 6வது நுழைவாயில் வழியாக திடலில் வந்து அமரவும்.

கொளத்தூர்,மாதவரம் தொகுதியை சார்ந்த கழக தோழர்கள் மூலக்கடை மாதவரம் நெடுஞ்சாலை, முரசொலி மாறன் மேம்பாலம் பெரம்பூர் நெடுஞ்சாலை, ஸ்டீபன்சன் சாலையில் உள்ள பார்க்கிங் 8ல் வாகனத்தை நிறுத்தி விட்டு 7வது நுழைவாயில் வழியாக திடலில் வந்து அமரவும்.

• ஸ்டீபன்சன் சாலையில் உள்ள 9வது பார்க்கிங் இரு சக்கர வாகனத்திற்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது.

• பார்க்கிங் எண் 11 அவசர தேவைக்கும் வெளியில் செல்வதற்கும் பயன்படுத்த ஒதுக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சிக்கு வாகனத்தில் வருபவர்கள் தயவு கூர்ந்து சாலைகளில் வாகனத்தை நிறுத்தி இறங்காமல் சுமார் 13 ஏக்கர் நிலபரப்பில் அமைக்கப்பட்டுள்ள வாகனம் நிறுத்தும் இடத்தில் வாகனத்தை நிறுத்திவிட்டு கூட்ட அரங்கிற்கு நடந்து வருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: 1வது நுழைவாயிலில் கண்டிப்பாக கார் பாஸ் உள்ளவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு
செயலாளர்
சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நிதியுதவி - நடப்பாண்டிற்கான

ரூ.30 ஆயிரம் கோடி இலக்கை எட்டுவோம்!

மாநில அளவிலான வங்கியாளர் குழுக் கூட்டத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு பேச்சு!

சென்னை, ஜீன் 7- மாநில அளவிலான வங்கியாளர் குழுக் கூட்டத்தில் பேசிய தங்கம் தென்னரசு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நிதியுதவி அளிப்பது என்பது அரசின் முக்கிய கொள்கை நோக்கம் என்றும் நடப் பாண்டிற்கான இலக்கான ரூ.30 ஆயிரம் கோடியை வங்கிகள் எட்டும் என்று நம்புவதாகவும் குறிப் பிட்டார்.

06.06.2023ஆம் நாளன்று நடைபெற்ற மாநில அளவிலான வங்கியாளர் குழுக் கூட்டத்தில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆற்றிய உரை வருமாறு:-

மாநில அளவிலான வங்கியாளர் குழுக் கூட்டத்தின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரையும் உளமார வரவேற்கிறேன். மாநிலத்திலுள்ள அனைத்து முதன்மையான நிதி நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ் நாட்டின் நிதி அமைப்பை (Financial Landscape) வடிவமைப்பதில் சிறப்பான பங்காற்றி வரும் வங்கிகளுக்கு முதற்கண் என் நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தரமான நிதிச் சேவைகளை வழங்குவதற்கு நீங்கள் மேற்கொண்டு வரும் முயற்சிகள் நம் மாநிலத்தின் வளர்ச்சியிலும் மேம்பாட்டிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

கழக அரசால் பல்வேறு திட்டங்கள்!

கடந்த இரண்டாண்டுகளில், நம் மக்களின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றுவதிலும், சமூக நீதியை மேம்படுத்துவதிலும், சமூகத்தின் விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதிலும் இவ்வரசு பல்வேறு முதன்மையான திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் குடிமக்களின் நலனை உறுதிப்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள் இவ்வரசால் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

• முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டித் திட்டம்

•பேருந்தில் மகளிர் கட்டணமின்றிப் பயணம் செய்ய அனுமதி,

• பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் புதுமைப் பெண் திட்டம்,

• பட்டியலினத்தவர் / பழங்குடியினத்தவர் சுய தொழில்முனைவு நிதி,

• ஆதிதிராவிடர் வாழ்விடங்களில் கட்டமைப்பு மேம்பாட்டிற்கான அயோத்திதாச பண்டிதர் வாழ்விட மேம்பாட்டுத் திட்டம்,

• விளிம்புநிலை சமுதாயத்தினரை மேம்படுத்தும் வகையில் அண்ணல் அம்பேத்கர் வணிக வாகைமைத் திட்டம்

• கோவிட் பெருந்தொற்றினால் ஏற்பட்ட கற்றல் இழப்பை ஈடுசெய்யும் வகையில் 'இல்லம் தேடிக் கல்வி'த் திட்டம்,

• அடிப்படைக் கல்விக்கான 'எண்ணும் எழுத்தும்' திட்டம்,

• குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத நிதி

நடப்பாண்டில், தகுதி வாய்ந்த குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000/ வழங்கும் வகையில் 'மகளிர் உரிமைத் தொகை' திட்டம் செயற்படுத்தப்படும் என்றும் நாங்கள் அறிவித்துள்ளோம்.

மாபெரும் உச்சிக்கு இட்டுச் செல்லும்!

மாநில அரசால் இடைவிடாமல் தொடர்ந்து பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிற போதிலும், அரசின் மூலம் மேற்கொள்ளப்படும் செலவினங்களின் தாக்கம் பொருளாதாரத்தில் ஒரு பங்காகவே அமைந்துள்ளது. மாநில வரவுசெலவுத் திட்ட அளவானது, ரூ.3.65 லட்சம் கோடியாக மாநிலப் பொருளாதாரத்தில் 13% என்ற அளவிலேயே அமைந்துள்ளது. ஏனையவற்றுடன் ஒப்பிடுகையில், கடன் பொருளாதாரத்தின் மொத்த முன்பணத் தொகையான ரூ.13.03 லட்சம் கோடி என்பது, தமிழ் நாட்டின் பொருளாதாரத்தை மாபெரும் உச்சிக்கு இட்டுச் செல்லும் ஆற்றல் வாய்ந்த உந்து சக்தியாக வங்கிகள் திகழ்வதையே உணர்த்துகிறது. இவ்வகையில், வங்கிகளுக்கும் அரசுக்குமிடையேயான கூட்டுறவானது நமது முயற்சிகளுக்கு மேலும் வலுச்சேர்க்கும் என்பதுடன் மாநிலம் மற்றும் மாநில மக்களின் நலன் சிறக்கும் வகையில் சிறப்பான பலன்களை எய்துவதிலும் துணைநிற்கும்.

கடனுக்குலம் வைப்புத் தொகைக்குமான விகிதம் தொடர்ந்து 100 சதவீதத்திற்கு அதிகமாகவும் 31.03.2023 அன்றுள்ளவாறாக, 114.67 சதவீதமாகவும் உள்ளது என்பதைக் குறிப்பிடுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். 2022-23 ஆம் ஆண்டிற்கான முன்னுரிமைத் துறை கடன்களுக்கான இலக்குகளை எய்தியது மட்டுமின்றி, அவ்விலக்கைக் காட்டிலும் கூடுதலாக 40 சதவீதம் எய்திய வங்கிகளை நான் பாராட்ட விழைகிறேன். மாநிலத்தில் திகழும் தொழில் முனைத்துவத்தின் அடிப்படையில், 2023-24 ஆம் ஆண்டிற்கான இலக்குகள் மிகவும் அதிகமாக இருக்குமென நான் நம்புகிறேன். மேலும், சுய உதவிக் குழுக்களுக்கு நிதியுதவி அளிப்பது என்பது அரசின் முக்கிய கொள்கை நோக்கமாகும். 2022-23 ஆம் ஆண்டிற்கான இலக்கான 25,000/ கோடி ரூபாய் எய்தப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். 2023-24 ஆம் ஆண்டிற்கான இலக்கான 30,000 கோடி ரூபாயை வங்கிகள் எட்டும் என்று நான் நம்புகிறேன்.

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் விவசாயத் துறைகளுக்கான கடன் வளர்ச்சியடைந்துள்ள நிலையில், வீட்டு வசதி மற்றும் கல்வித் துறைக்கான முன்பணங்கள் குறைந்துள்ளது வருந்தத்தக்க வகையில் அமைந்துள்ளது. தரமான கல்வியை வழங்க வேண்டுமென்பது அரசின் உயர் முன்னுரிமைகளில் ஒன்றாகும். கடன் வசதி இன்மை மாணவர்களுக்கு தடையாக இருக்கக்கூடாது. கூடுதலாக, முன்னுரிமைத் துறை முன்பணங்களுக்கும் மொத்த முன்பணங்களுக்குமான மொத்த விகிதம் 49.51 சதவீதத்திலிருந்து 47.81 சதவீதமாக குறைந்துள்ளது. அவற்றின் செயல் திறனை மேம்படுத்துவதற்கான ஒவ்வொரு முயற்சியையும் வங்கிகள் மேற்கொள்ள வேண்டுமென நான் வலியுறுத்துகிறேன்.

அதே நேரத்தில், வங்கிகள், கடன் தொகைக்கு மட்டும் இலக்கினை நிர்ணயிக்காமல், கடன் வாங்குபவர்களின் எண்ணிக்கையிலும் கவனம் செலுத்த வேண்டும் என்பது முக்கியமானதாகும். முறையான கடன் பொருளாதாரம் என்பது அதிக அளவிலான பயனாளிகளை சென்றடைய வேண்டும் என்பதால் புதிய பயனாளிகள் அதிலும் குறிப்பாக சமுதாயத்தின் நலிவடைந்த விளிம்பு நிலை சமூகத்தினரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ளப்பட வேண்டும்.

கடன் வழங்குவதில் மண்டல அளவிலான ஏற்றதாழ்வுகள் அகற்றப்பட வேண்டும் என்றும் நான் வலியுறுத்திக் கூறுகிறேன். சில மாவட்டங்களுக்கு அதிக கடன் வழங்கப்படுவதும், சில மாவட்டங்களுக்குக் குறைவாக வழங்கும் நிலையும் உள்ளது எனத் தரவுகள் தெரிவிக்கின்றன. இலக்கு சார்ந்த உத்திகள், திட்டமிடப்பட்ட வழிமுறைகள் மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சி முன்முயற்சிகளை செயல்படுத்துவதன் வாயிலாக, வளமான கடன் பொருளாதாரத்தின் நன்மைகள் தமிழ் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சமமாக பகிர்ந்து கொள்ளப்படுவதை வங்கிகள் உறுதி செய்ய வேண்டும்.

அனைவருக்கும் நிதி சார்ந்த சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கான அரசின் தொலைநோக்குத் திட்டம், சேவைகள் கிடைக்கப்பெறாதவர்களுக்கும் வங்கிக் கணக்கு இல்லாத மக்களுக்கும் சென்று சேர வேண்டுமென்ற வங்கிகளின் உறுதிப்பாட்டுடன் ஒத்துள்ளது . கடந்த நிதியாண்டில் மாநிலத்தில் 417 புதிய வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டுள்ளன என்பதைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். வனப்பகுதிகள் போன்ற தொலைதூர வாழ்விடங்களுக்கும் வங்கி சேவைகள் திறம்பட கிடைக்கப்பெறுவது இன்றியமையாததாகும். மேலும், நமது மாநிலத்திலுள்ள மக்கள் வங்கிகளை எளிதாக அணுகுவதை உறுதி செய்வதற்காக, காசாள் கருவிகள் (ஏ.டி.எம்கள்) மற்றும் வங்கிக் கிளைகளின் முகப்பு மேசைகளில் தமிழ் மொழி பயன்படுத்தப்படுவதை வங்கிகள் உறுதி செய்ய வேண்டுமென நான் வலியுறுத்துகிறேன்.

சிறப்பாகச் செயற்படும் கடன் பொருளாதாரமானது, சமூகத்தில் விளிம்பு நிலை மக்களும் ஏனையோருக்கு இணையான நிதிச் சேவைகளைப் பெறுவதை உறுதி செய்து, அனைத்துத் தரப்பினருக்குமான நிதிச் சேவைகளை வழங்குவதை உறுதி செய்கிறது. இது, வறுமை நிலையைத் தகர்த்தெறிந்து, மகளிர், உழவர் மற்றும் சிறிய அளவிலான தொழில் முனைவோர் போன்றோருக்கு அதிகாரமளிப்பதுடன், மாநிலத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கும் பங்காற்றுகிறது. ஆற்றல் வாய்ந்த நம்முடைய பொருளாதாரத்தின் பெருகிவரும் தேவைகள் மற்றும் சவால்களை எதிர்கொள்வதில் வங்கிகளுக்கும் அரசுக்குமிடையேயான கூட்டுறவானது மிகவும் முக்கியமானதாகும். நிதிநிலை உறுதிப்பாடு, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் சமூக நலம் போன்றவற்றை ஊக்குவிக்கும் கொள்கைகளையும் முன்முயற்சிகளையும் நாம் இணைந்து உருவாக்கிச் செயற்படுத்தலாம்.இனி வரும் நாட்களிலும், வங்கிகளுடனான ஆரோக்கியமான பயனுள்ள உறவு தொடருமென நான் நம்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு உரையாற்றினார்.

தமிழ்நாடு வனத்துறைக்குப் பெருமை சேர்த்துள்ள

இராமநாதபுரம் மாவட்ட வன அலுவலருக்கு பாராட்டு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஜீன் 7 -

தமிழ்நாடு வனத்துறைக்கு பெருமை சேர்த்துள்ள இராமநாதபுரம் மாவட்ட வன அலுவலருக்கு பாராட்டுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டிருப்பதாவது:

இராமநாதபுரம் மாவட்ட வன அலுவலரும் மன்னார் வளைகுடா உயிர்க் கோளகக் காப்பகத்தின் இயக்குநருமான ஜகதீஷ்பகன், இ.வ.ப., அவர்கள் UNESCO அமைப்பால் வழங்கப்படும் உயிர்க்கோளகக் காப்பக மேலாண் மைக்கான (Biosphere Reserve Management) Michel Batisse Awardக்குத் தேர்வாகி, தமிழ்நாடு வனத்துறைக்கும் அரசுக்கும் பெருமை சேர்த்துள்ளார். அவருக்கு நம் பாராட்டுகள்.

நமது அரசு அமைத்த Marine Elite படையால்தான் இது சாத்தியமானது என அவர் கூறியதைக் கண்டு பெருமையடைந்தேன்.

ஜீன்14 அன்று பாரிஸ் நகரத்தில் நடைபெறும் நிகழ்வில் விருதைப் பெறவுள்ளதோடு, மன்னார் வளைகுடாப் பகுதியின் இயற்கை வளத்தைப் பாதுகாக்க மேற்கொண்ட முயற்சிகள் குறித்த அறிக்கையையும் உலக அரங்கில் விளக்கிக் காட்டவுள்ள ஜகதீஷ் அவர்களுக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.

விபத்தை திசை திருப்பி 'கிரிமினல் வடிவம்' தருவதற்கான முயற்சி!

ஒன்றிய அரசின் சி.பி.ஐ. விசாரணையை ஏற்க முடியாது!

சீத்தாராம் யெச்சூரி கண்டனம்!

புதுதில்லி, ஜூன் 7,

ஒடிசா ரயில் விபத்து தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டிருப்பது, இப்பிரச்சினையை முற்றிலும் திசை திருப்பி அதற்கு ஒரு கிரிமினல் வடிவம் கொடுக்க பா.ஜ.க. அரசு மேற்கொண்டுள்ள முயற்சி என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரி விமர்சித்துள்ளார்.

ஒடிசாவில் நடந்த கோர ரயில் விபத்து தொடர்பாக சி.பி.ஐ. விசாரணைக்கு ஒன்றிய மோடி அரசு உத்தரவிட்டுள்ளது. எந்தவொரு ரயில் விபத்தையும் முதலில் ரயில்வே பாதுகாப்பு ஆணையர்தான் விசாரிக்க வேண்டும் என்பது ஏற்கனவே நடைமுறையில் உள்ள நிலையில் அந்த விசாரணை நடப்பதற்கு முன்பே சி.பி.ஐ. விசாரணை நடைபெறும் என ஒன்றிய அரசு அறிவித்திருப்பது, இந்த விபத்துக்கு ஒரு கிரிமினல் வடிவம் கொடுப்பதற்கான முயற்சியே ஆகும் என்று சீத்தாராம் யெச்சூரி குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஒடிசா ரயில் விபத்து நடப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு இந்திய ரயில்வேயின் உண்மையான நிலை என்ன என்பது குறித்து மிக விரிவான அறிக்கையை ரயில்வே வாரியம் ஒன்றிய அரசுக்கு சமர்பித்திருந்ததையும் சுட்டிக்காட்டி விவரித்துள்ளார்

மே 31 அன்று இந்திய ரயில்வே வாரியத்தின் உயர் நிலைக் குழுக் கூட்டம் நடை பெற்றது. இந்தக் கூட்டத்தில் ரயில்வே நிர்வாகத்தின் உயர்மட்ட அதிகாரிகள், அனைத்து ரயில்வே மண்டலங்களின் பொது மேலாளர்கள் ரயில்வே வாரியத் தலைவர் உள்ளிட்டோர் பங்கேற்றிருக்கிறார்கள்.

இந்தக் கூட்டத்தில் ரயில்வே ஊழியர்களின் நிலை உட்பட பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கிழக்கு கடற்கரை ரயில்வே மற்றும் தென்கிழக்கு மத்திய ரயில்வேயில் நிலைமை மிக மோசமாக உள்ளது பற்றியும் அவர்கள் விவாதித்துள்ளனர். இக் கூட்டத்தில், ரயில் ஓட்டுநர்கள் (லோகோ பைலட்) வரையறுக்கப்பட்ட வேலைநிறுத்தத்தைவிட மிக மிகக் கூடுதலான நேரம் பணியாற்றுமாறு நிர்ப்பந்திக்கப்படும் பிரச்சனை தீவிரமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

விதிகளின் படி ஒரு ஓட்டுநர் எந்தவொரு சூழலிலும் அதிகபட்சம் 12 மணி நேரத்திற்கும் மேல் பணியாற்றக்கூடாது. ஆனால் உண்மை நிலவரம் அப்படி இல்லை. ஆள் பற்றாக்குறை காரணமாக 12 மணி நேரத்தையும் தாண்டி பல மணி நேரம் பணியாற்ற வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகிறார்கள். இது ரயில்வே பாதுகாப்பு விதிகளின்படி மிக மிகக்கடுமையான விதி மீறல் ஆகும் என்பதை ரயில்வே வாரியம் தீவிரமாக ஆலோசித்துள்ளது.

ஸ்டேசன் மாஸ்டர்கள் துவங்கி, லோகோ பைலட்டுகள் உள்பட, கேங்மேன் வரையிலான பல தரப்பு ஊழியர்கள் ரயில்வேயில் உள்ளனர். குறிப்பாக போக்குவரத்து உதவியாளர் சரக்கு பாதுகாவலர் ஜூனியர் மற்றும் சீனியர் டைம் கீப்பர், ஜூனியர் மற்றும் சீனியர் எழுத்தர்கள் உள்பட ரயில்வேயில் சி கிரேடு பணியிடங்கள் மொத்தம் 14லட்சத்து 75 ஆயிரத்து 623 உள்ளன. இவற்றில் 3.11லட்சம் பணியிடங்கள் முற்றிலும் காலியாக விடப்பட்டுள்ளன.

இதன்காரணமாக லோகோ பைலட்டுகள் மட்டுமல்ல, அனைத்துத் துறைகளிலும் கடுமையான பணிப்பளு ஒட்டுமொத்த ரயில்வே ஊழியர்களையும் துயரத்தின் பிடியில் நிறுத்தியுள்ளது. இதன்விளைவாக ரயில் விபத்துக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

2021- 22ல் சிறிய அளவிலான ரயில் விபத்துக்கள் 35 நடந்தன; 2022-23ல் இது 48 விபத்துக்களாக அதிகரித்துள்ளது. இதில் பல விபத்துக்களில் சிக்னல் கோளாறு காரணமாக இருந்துள்ளது. கடும் பணிப்பளு காரணமாக ரயில் ஓட்டுநர்கள் விபத்துக்களை தவிர்க்க முயன்ற போதிலும், அதிக விபத்துக்கள் பதிவாகியுள்ளன. தென்கிழக்கு மத்திய ரயில்வேயில், நாளொன்றுக்கும் 12 மணி நேரத்திற்கும் மேலாக 2023 மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதத்தின் முதல் 15 நாட்களில் மட்டும் முறையே 35.99 சதவீதம், 34.53 சதவீதம் மற்றும் 33.26 சதவீதம் கூடுதல் நேரம் லோகோ பைலட்டுகள் ரயிலில் பணி செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். இத்தகைய நிலைமை குறித்து ரயில்வே வாரியம் மிகத் தீவிரமாக விவாதித்தது என மே 31 தேதியிட்ட இந்து நாளிதழில் விரிவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

விடுப்போ, ஓய்வோ இல்லாமல் மிகக்கடுமையாக வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்படும் பின்னணியில், அதை ரயில்வே வாரியமும் ஒன்றிய அரசுக்கு சுட்டிக்காட்டி இப்பிரச்சினையை தீவிரமாக எழுப்பியுள்ள நிலையிலும் அதைப் பற்றி ஒன்றிய மோடி அரசு வாய்திறக்க மறுக்கிறது என சீத்தாராம் யெச்சூரி சுட்டிக்காட்டியுள்ளார். தற்போதைய விபத்து தொடர்பாக விதிகளின்படி ரயில்வே பாதுகாப்பு ஆணையரே முதலில் விசாரிக்க வேண்டும்; அவரது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பிறகு அதை ஆய்வு செய்ய வேண்டும், மாறாக இந்த விபத்து தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை என்பதை அனுமதிக்க முடியாது; சி.பி.ஐ. விசாரணை என்பது இப்பிரச்சினைக்கு கிரிமினல் வடிவம் தருவதற்கான முயற்சியே என்றும் அவர் சாடியுள்ளார்.

"காலம் செதுக்கிய "கலைஞர்" எனும் கல்வெட்டு"

ஞாலம் போற்றுகிற
நற்றமிழ் கலைஞரை
காலம் செதுக்கிய
கல்வெட்டு என்பேன்.

ஆலம் விழுதுகளாய்
அனைத்தையும் தாங்கியே
பாலம் அமைத்திட்ட
பைந்தமிழ்த் தலைவரவர்!

கோலம் முதுமையைக்
கொண்டுவந்த போதும்
நீலக் கடல்போல
நிலத்திடை வாழ்ந்தவர்!

வரலாறு போற்றும்
வசனப் புரட்சியை
திரை உலகில் புகுத்தி...
திரும்பிப் பார்க்க வைத்தவர்!

முத்தமிழ் மூன்றையும்
முறையாய்க் கையாண்டு
முத்திரை பதித்திட்ட
முத்தமிழ் அறிஞரிவர்!

வீசிய புயலின்
வேகத்தைப் போலே
பேசிய பேச்செல்லாம்
பேர் சொல்ல வைத்தது...

என் இடத்தை நிரப்பிட
என் தம்பி இருக்கிறான்
என்றியம்பிய அண்ணாவின்
இதய வேட்கை தீர்ந்தது...

தமிழகமே தழைத்தது...
தலைநிமிர்ந்து நின்றது...
அமைதியாய்ச் சாதனைகள்
அடுக்கடுக்காய்த் தொடர்ந்தது...

வேதனைத் தமிழகம்
வெளிச்சம் கண்டது
சூதுமதி யாளரின்
சூழ்ச்சிகள் தோற்றது...

இடையிலே ஆட்சி மாற்றம்
இடைச் செருகலாய் வந்தாலும்
கடமைகள் மறக்காமல்
கலைஞர் பணி தொடர்ந்தது...

இயற்கை எய்திய
இறுதிநாள் வரையிலும்
உயர்தமிழ் நாடுதான் - அவர்
உதிரத்தில் இருந்தது.

நல்லவேளை கலைஞரின்
நற்பயனாய்த் "தளபதி"
துள்ளிவரும் வேலாக
தொண்டாற்ற வந்திட்டார்!

எத்தனை இன்னல்கள்
எதிர்வந்த போதும்
அத்தனையும் தாங்கியே
அரவணைத்துச் செல்கின்றார்!

கலைஞரின் நூற்றாண்டில்
கால்பதிக்கும் வேளையில்
பலம் சேர்க்க
தளபதிக்கு பக்கதுணை ஆகிடுவோம்!

- கவிஞர் இரவி பாரதி